# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No.17/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பிரான்சிஸ் **Rw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of February 2026.

**முதல் விசாரணை**

நான் கோவில்பட்டி அருகே இளையரசனேந்தலில் வசித்து வருகிறேன். லாரி டிரைவராக பணிபுரிகிறேன். நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். TN-59-AJ-2912 லாரியின் ஓட்டுநராக இருந்தேன். இம்மனு விபத்து தேதியானது எனக்கு நினைவில்லை. விபத்து தேதியன்று லாரி நிறுத்தும் இடத்தில் நான் வாகனத்தின் பக்கவாட்டு இன்டிகேட்டர்களை போட்டுவிட்டு சாலையின் ஓரம் மண் தரையில் லாரியை நிறுத்திவிட்டு பில் போட சென்றேன். நான் இறங்கி சென்ற சமயம் டமார் என்ற சத்தம் கேட்டது, என்னவென்று நான் சென்று பார்த்தபோது எனது லாரியின் பின்பக்கம் ஒரு இருசக்கர வாகனம் வந்து மோதியது தெரியவந்தது. மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள்

தலைக்கவசம் எதுவும் அணியவில்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

மேற்படி விபத்து தொடர்பாக என் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையானது இருவழி சாலை என்றால் சரிதான், நான்கு வழி சாலை கிடையாது. நான் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 2000 ரூபாய் அபராதம் செலுத்தி விபத்து தொடர்பான குற்றவழக்கை முடித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். எனது வாகனத்தின் காப்பீட்டு கழகம் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது என்றால் சரிதான். என் மீது பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையினை எதிர்த்து நான் வேறு சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் லாரியை நிறுத்திவிட்டு பில் போட சென்றதாக முதல்விசாரணையில் கூறியுள்ள நிலையில் மேற்படி ரசீதினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது கவனக்குறைவால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்பதால்தான் போலீசார் பதிவுசெய்த வழக்கினை எதிர்த்து நான் சட்டநடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் கவனக்குறைவாக சாலையின் நடுவே லாரியை நிறுத்தி விபத்து ஏற்பட காரணமாக இருந்தேன் என்றும், இருசக்கர வாகனம் ஓட்டி வந்தவர்கள் மீது எந்த தவறும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi